# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1423/6 - 2005 දෙසැම්බර් 13 වැනි අඟහරුවාදා - 2005.12.13

1423/6 ஆம் இலக்கம் - 2005 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.- பீ 21/78

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 24அ என்னும் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

2005.11.02

**கட்டளைச் சட்டம்**

1. இக்கட்டளைச் சட்டம் 2005 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க பட்டப்பின் ஆங்கில நிறுவகக் கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2005.10.01 ஆம் தேதிமுதல் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. இக்கட்டளைச் சட்டம் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ என்னும் பிரிவின்கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2005, ஒற்றோபர் 31 ஆம் தேதிய 1471/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்மானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் தாபிக்கப்பட்ட (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பட்டப்பின் ஆங்கில நிறுவகத்திற்கு ஏற்புடைத்தாதல் வேண்டும்.

3. நிறுவகம் (இதனகத்துப் பின்னர் "பல்கலைக்கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்துடன் இணைந்திருத்தல் வேண்டும்.

4. நிறுவகமானது, சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் (இதனகத்துப் பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பணிப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் அமையப் பின்வரும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) மாணவர்களை அனுமதிப்பதற்கு ;

(ஆ) ஆங்கில மொழித்துறையில் பாடநெறிகளை நடாத்துவதற்கு ;

(இ) நிறுவகத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின்மீது, ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறு ஆங்கிலத்தில் போதனைக்கும் பயிற்சிக்கும் ஆய்வுகட்கும் அபிவிருத்திக்கும் அத்துடன் ஆலோசனைகளுக்கும் ஏற்பாடு செய்தல் ;

(ஈ) இயைபான கற்கைத்துறைகளில் தேர்ச்சி பெற்றுள்ள ஆட்களை ஆய்ந்தறியும் நோக்கத்திற்கு பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடன் பரீட்சைகளை நடத்துவதற்கும் அத்தகைய பரீட்சைகளில் சித்தியடைந்து துணைவிதிகளில் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு நிபந்தனைகளைத் திருப்திப்படுத்தியும் பல்கலைக்கழகத்தின் பட்டங்களினதும் டிப்ளோமாக்களினதும் அத்துடன் வேறு கல்விச் சிறப்புகளினதும் அளிப்புக்குப் பல்கலைக்கழகத்திற்கு விதப்புரை செய்வதற்கும் ;

(உ) பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடனும் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடனும் நிறுவகத்தின் பல்வேறு கற்கைநெறிகளுக்கு அளிக்கப்படவுள்ள பட்டங்களையும் திப்புளோமாக்களையும் சான்றிதழ்களையும் வேறு கல்விச் சிறப்புக்களையும் தீர்மானிப்பதற்கும் ;

(ஊ) நிறுவகத்தின் குறிக்கோள்களையொத்த அல்லது பொருளளவில் அக்குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடைய இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுடனும் நிறுவனங்களுடனும் ஆசிரியர்களையும் மாணவர்களையும் அத்துடன் கல்விமான்களையும் பரிமாறுவதன் மூலம் அல்லது வேறு வகையில் ஒத்துழைப்பதற்கும் ;

(எ) நிறுவகத்திற்கு அனுமதி கோரும் ஆட்கள் சித்தியடைந்த பரீட்சைகளையும், பயிலல் அல்லது கற்கைக் காலப்பகுதிகளையும் துணைவிதிகளால் விதித்துரைக்கப்பட்டவாறு அங்கீகரிப்பதற்காகவும் அத்துடன் அத்தகைய அங்கீகாரத்தை மீளப்பெறுவதற்காகவும் பல்கலைக்கழக மூதவைக்கு விதப்புரை செய்வதற்கும் ;

(ஏ) பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடனும் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடனும் புதிய கற்கைச் சபைகளை நிறுவுதலைத் தீர்மானிப்பதற்கும் ;

(ஐ) நிறுவகத்தின் நோக்கத்திற்குத் தேவைப்படக்கூடியவாறு போதனைக்கு, பயிற்சிக்கு, ஆராய்ச்சிக்கு, அபிவிருத்திக்கு அல்லது ஆலோசனை நோக்கங்களுக்குப் பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடன் நூலகங்களையும் ஆய்வுகூடங்களையும் வேறு கட்டிடங்களையும் நிறுவுவதற்கும் சாதன வசதிகளை அமைப்பதற்கும் பேணுவதற்கும் ;

(ஒ) பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடன் நிறுவகத்தின் நோக்கத்திற்குத் தேவைப்படக்கூடியவாறான கற்பித்தல், நிர்வாக மற்றும் வேறு பதவிகளை உருவாக்குவதனையும் அத்தகைய பதவிகளை அழித்தலையும் அல்லது இடைநிறுத்துதலையும் ஆணைக்குழுவுக்கு விதப்புரை செய்வதற்கும் ;

(ஓ) பல்கலைக்கழகத்துடனான கலந்தாலோசனையுடன் ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்களையும் புலமைப் பொருளுதவிகளையும் ஏழைக் கல்வியுதவிகளையும் பதக்கங்களையும் வேறு பரிசில்களையும் ஏற்படுத்தி வழங்குவதற்கும் ;

(ஔ) நிறுவகத்திற்கு வெளியே கற்கைப் பயிற்சிநெறிகளை அல்லது கற்கைப் பயிற்சிநெறிகளின் பாகங்களை, அதனை ஏற்பாடு செய்யும் ஏதேனும் துணைவிதிக்கிணங்க நடத்துவதற்கு ஒழுங்குசெய்வதற்கும் ;

(க) கட்டணத்திற்கு ஏற்பாடு செய்யும் ஏதேனும் விதிக்கிணங்க கட்டணங்களைக் கோருவதற்கும் பெறுவதற்கும் ;

(ங) நிறுவகத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்கு மேற்படி தத்துவங்களுக்கும் கடமைகளுக்கும் பணிகளுக்கும் இடைநேர்விளைவான அல்லது அதன் விளைவாந்தன்மையான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்வதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்.

5. நிறுவகம் பின்வரும் அலுவலர்களை உடையதாதல் வேண்டும் :-

(i) பணிப்பாளர் ; அத்துடன்

(ii) எந்தப் பதவியை வகிப்பவர் இந்தப் பந்தியின் நோக்கத்துக்காக அலுவலரொருவராக இருக்கின்றாரோ இந்தப் பதவியெனக் கட்டளைச் சட்டத்தால் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் பதவியை வகிப்பவர்,

6. (1) நிறுவகத்தின் முதலாவது பணிப்பாளர் ஆணைக்குழுவால் நியமிக்கப்படுதல் வேண்டும். அடுத்துறும் பணிப்பாளர் ஒவ்வொருவரும் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் நிறுவகத்தின் முகாமைச்சபையால் விதந்துரைக்கப்பட்ட மூன்று ஆட்களைக்கொண்ட குழாம் ஒன்றிலிருந்து (இதனகத்துப்பின்னர் ''பேரவை'' எனக் குறிப்பீடு செய்யப்படும் பல்கலைக்கழகப் பேரவையால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

ஆயின் எவ்வாறாயினும் ஆளெவரும் தொடர்ந்து இரண்டு தவணைகளுக்குமேல் நிறுவகத்தின் பணிப்பாளராக நியமிக்கப்படுதலாகாது.

(2) நிறுவகத்தின் பணிப்பாளர், அவர் பதவியை முன்னரே வறிதாக்கினாலன்றி அல்லது (3) ஆம் உட்பந்தியின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி அவரது நியமனத்தேதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு அல்லது அவர் அறுபத்தைந்து வயதை பூர்த்திசெய்யும்வரை, இவற்றுள் எச்சம்பவம் முன்னராக நிகழ்கின்றதோ அதுவரை பதவி வகித்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர் அந்நோக்கத்திற்கென கூட்டப்பட்ட விசேட கூட்டமொன்றில் முகாமைச் சபையின் (இதனகத்துப்பின்னர் ''சபை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) மொத்த உறுப்பினர்களுள் மூன்றில் இரண்டிற்குக் குறையாதோரால் நிறைவேற்றப்பட்ட கண்டன வாக்கொன்றின்மீது பதவியிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும். அத்தகைய கூட்டத்தில் சமூகமாயிருக்கும் உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குவதற்கு பணிப்பாளர் தவிர்ந்த ஆளொருவரைத் தங்களிடையேயிருந்து தெரிவு செய்தல் வேண்டும்.

(4) பதவி விலகிய அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்ட நிறுவகத்தின் பணிப்பாளர், பணிப்பாளராக அவரது நியமனத்திற்கு உடன் முன்னய உயர் கல்வி நிறுவகமொன்றின் பணியாட்டொகுதிக்கு உறுப்பினரொருவராக இருந்திருப்பின், அத்தகைய உயர் கல்வி நிறுவகத்தில் அவரது நிலையான பதவிக்குத் திரும்பச் செல்லலாம். ஆயின் அவரது முன்னைய பதவியில் ஓய்வு பெறும் வயதை அடையாதவராக இருந்திருத்தல் வேண்டும்.

(5) பணிப்பாளர், சுகயீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமையின் காரணமாக அல்லது வேறு காரணமாக அல்லது வேறு ஏதுக்கள் காரணமாக அவரது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதிருப்பின், (இதனகத்துப்பின்னர் ''துணைவேந்தர்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அத்தகைய இயலாமை ஏற்பட்ட ஏழு நாட்களுக்குள் பணிப்பாளரின் பதவிக்குரிய கடமைகளைக் கொண்டு நடாத்துவதற்குப் பொருத்தமானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்குகள் செய்யப்படும்வரை (இதனகத்துப்பின்னர் ''பதிவாளர்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) பல்கலைக்கழகப் பதிவாளர் அத்தகைய பதவிக்குரிய வழமையான கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

(6) பணிப்பாளர் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படின் துணைவேந்தர் அத்தகைய வெற்றிடம் ஏற்பட்ட ஏழு நாட்களுக்குள், பணிப்பாளர் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குப் பொருத்தமானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்குகள் செய்யப்படும் வரை பதிவாளர் பணிப்பாளரின் வழமையான கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

7. (1) பணிப்பாளர் நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராகவும் பிரதான கல்விசார் அலுவலராகவும் இருத்தல் வேண்டும். அவர் நிறுவகத்தின் சபையின் பதவிவழி உறுப்பினரொருவராகவும் கல்விசார் குழுவின் பதவிவழி உறுப்பினரொருவராகவும் இருத்தல் வேண்டும். இவர் நிறுவகத்தின் வேறெந்த அதிகாரசபையினதும் அல்லது குழுமத்தினதும் கூட்டத்தில் சமூகமாயிருப்பதற்கும் உரையாற்றுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும். ஆனால் அவர் அத்தகைய வேறு அதிகார சபையின் அல்லது குழுமத்தின் உறுப்பினரொருவராக இருந்தாலன்றி அத்தகைய கூட்டம் எதிலும் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(2) சபையால் அதன் சார்பில் காலத்துக்குக் காலம் சட்டமுறையாகத் தமக்கு வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கிணங்க, கட்டளைச் சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சாதனத்தின் ஏற்பாடுகள் அவை நிறுவகத்தைத் தொடர்புறுத்தும் அளவுக்கு, முறையாக அனுசரிக்கப்படுவதை உறுதிப்படுத்துவது பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும் என்பதுடன் அவர், அந்நோக்கத்திற்கு அவசியமானதென அவர் கருதப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அவற்றையும் பிரயோகிக்கலாம்.

(3) சபையின் முடிபுகளுக்குப் பயனளிப்பது அல்லது பயனளிக்கச் செய்விப்பது பணிப்பாளரது கடமையாதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் நிறுவகத்தின் கணக்கீட்டு அலுவலராதல் வேண்டும்.

(5) பணிப்பாளர், பல்கலைக்கழகத் துணைவேந்தரின் பணிப்பின்கீழ், நிறுவகத்தினுள் ஒழுக்காற்றைப் பேணுவதற்குப் பொறுப்பாயிருத்தல் வேண்டும். ஒழுக்காறு தொடர்பிலான எவையேனும் துணைவிதிகள் இல்லாதவிடத்து பல்கலைக்கழகத்தின் தோதான துணை விதிகளும் வேறு விதிகளும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

8. நிறுவகம் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) சபை ;

(ii) கற்கைச் சபை அல்லது சபைகள் ; அத்துடன்

(iii) ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு குழுக்கள்.

9. சபை நிறுவகத்தின் கல்விசார் மற்றும் நிறைவேற்றுக் குழுவாதல் வேண்டும் என்பதுடன் அது பின்வருவோரைக் கொண்டிருத்தலும் வேண்டும்:-

(1) ஆறு பதவிவழி உறுப்பினர்கள் ; அதாவது-

(அ) பணிப்பாளர் ;

(ஆ) உயர் கல்வி எனும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது உயர்கல்வி என்னும் விடயம் வேறு எந்த அமைச்சுக்குக் குறித்தொதுக்கப்பட்டலாமோ அந்த வேறு அமைச்சின் செயலாளர்;

(இ) ஆங்கிலம் கற்பித்தல்மீது ஆணைக்குழுவின் நிலையியற்குழுவின் தவிசாளர் ;

(ஈ) பல்கலைக்கழகத்தின் ஆங்கிலப் பகுதித் தலைவர்;

(உ) பல்கலைக்கழகத்தின் ஆங்கிலப் பேராசிரியர்கள் , அத்துடன்

(2) வேறு எட்டு உறுப்பினர்கள் , அதாவது-

(அ) பேரவையினால் அதன் உறுப்பினர்களிடையேயிருந்து பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி ;

(ஆ) ஆணைக்குழுவால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆங்கிலப் பேராசிரியர்கள் அல்லது (ஏற்புடைத்தாகின்றவாறு) ஆங்கிலம், ஆங்கிலமொழியைக் கற்பித்தல் மற்றும் மொழியியல் என்னும் பாடங்களைக் கற்பித்தலுக்குப் பொறுப்பாயிருக்கும் பகுதித் தலைவர்கள் ஐவர் ;

(இ) (இதனகத்துப்பின்னர் "மூதவை" எனக்குறிப்பீடு செய்யப்படும்) பல்கலைக்கழக மூதவையால் அதன் உறுப்பினர்களிடையேயிருந்து தெரிவு செய்யப்படும் ஒரு உறுப்பினர் ;

(ஈ) கற்கைச் சபைகளால் அவற்றின் உறுப்பினர்களிடையேயிருந்து தெரிவு செய்யப்படும் இரண்டு உறுப்பினர்கள் ;

(உ) தொழில்நுட்பவியல், கல்வி அல்லது நிர்வாகம் என்னும் துறைகளில் சிறப்புமிக்க சேவை புரிந்துள்ள ஆட்களிடையேயிருந்து ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் ;

(ஊ) ஆசிரியர் கல்வியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு தேசிய கல்வி நிறுவகத்தின் பெயர்குறித்த நியமத்தர் ஒருவர்.

10. (1) ஆங்கிலம் கற்பித்தல்மீதான ஆணைக்குழுவின் நிலையியற் குழுவின் தவிசாளராக இருக்கவேண்டியவரான சபையின் தவிசாளர் சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதலும் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் சமூகமாயிராதவிடத்து, உறுப்பினர்கள் சமூகமாயிருக்கும் உறுப்பினர்களிடையேயிருந்து அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குவதற்கென வேறு எவரேனும் உறுப்பினரைத் தெரிவு செய்தல் வேண்டும்.

(2) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் அவர் பதவியை முன்னரே வறிதாக்கினாலன்றி, அவரது பெயர் குறித்த நியமனத்திகதியிலிருந்து அல்லது நியமனத் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு உறுப்பினரொருவராகப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி மீளவும் பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கு அல்லது மீளவும் நியமிக்கப்படுவதற்கு தகுதியுடையவராதலும் வேண்டும்.

ஆயின் எவ்வாறாயினும், பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் அவரது பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னர் அவரது பதவியை வறிதாக்குவாராயின், அவரது அடுத்துறுபவர், அவரது பதவியை முன்னரே வறிதாக்கினாலன்றி, அவரது முன்னுறுபவரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

ஆயின், மேலும் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் அவர் எந்த அந்தஸ்தின் பயனைக்கொண்டு சபையின் உறுப்பினரொருவராக இருக்கின்றாரோ அந்த அந்தஸ்தை அவர் வகிக்கின்றவரை பதவிவகித்தல் வேண்டும்.

(3) சபையின் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் எவரும் பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான வேண்டுகோளொன்றின் மூலம் அவரது பதவியைத் துறக்கலாம்.

(4) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் பேரவையின் தவிசாளருக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான கடிதமொன்றின்மூலம் அவரது பதவியைத் துறக்கலாம்.

(5) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் அவரை நியமித்த குழுவின் தவிசாளருக்கு முகவரியிட்டெழுதப்பட்ட எழுத்திலான கடிதமொன்றின்மூலம் அவரது பதவியைத் துறக்கலாம். அதாவது விடயத்திற்கேற்ப ஆணைக்குழு, தேசிய கல்வி நிறுவகம் அல்லது தேசிய கல்வி ஆணைக்குழு.

(6) லீவுக்கான அனுமதி இல்லாமல் தொடர்ச்சியாக சபையின் மூன்று கூட்டங்களுக்கு வருகை தரத் தவறுகின்ற சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் சபையின் உறுப்பினர் ஒருவராக அவரது பதவியை வறிதாக்கியுள்ளார் எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன் விளைவாக ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு, (5) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட நியமிக்கும் அதிகாரி 9 ஆம் ஒழுங்குவிதியின் 2 (ஈ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு பொருத்தமான ஆளொருவரை நியமித்தல் வேண்டும்.

(7) நிறுவகத்தின் ஊழியரொருவராயிருக்கின்ற சபை உறுப்பினரொருவர் ஏதேனும் ஊதியத்திற்கு உரித்துடையவராதலாகாது. ஆனால் வேறு உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய வேதனம் அல்லது படிகள் செலுத்தப்படுதல் வேண்டும்.

(8) ஏதேனும் கூட்டத்திற்கான நடப்பெண் சபையின் மொத்த உறுப்பாண்மையின் மூன்றிலொன்றாதல் வேண்டும்.

(9) சபை, அவசியமானபொழுது கூடுதல் வேண்டும். ஆயின், எவ்வாறாயினும் அது ஒவ்வோராண்டு எட்டுத் தடவைகளுக்குக் குறையாமல் கூடுதல் வேண்டும்.

(10) சபையின் தவிசாளர், அவசியமானதென அவர் கருதுகின்றபோது அல்லது சபையின் மொத்த உறுப்பாண்மையின் மூன்றிலொரு பகுதியினரிடமிருந்து எழுத்திலான வேண்டுகோளொன்று அவருக்குக் கிடைக்கப்பெற்ற ஒரு வாரத்திற்குள் சபையின் விசேட கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வேண்டுகோள் அத்தகைய விசேட கூட்டத்தின் நோக்கத்தையும் உள்ளடக்குதல் வேண்டும்.

11. (1) சட்டத்தினதும், ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய சபை, பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) நிறுவகத்தின் அசைவுள்ள அல்லது அசைவற்ற சொத்துக்களை வைத்திருப்பதற்கு, கட்டுப்படுத்துவதற்கு அத்துடன் நிருவகிப்பதற்கு ;

(ஆ) சட்டத்தினதும் வேறு ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாட்டிற்கிணங்க நிறுவகம் தொடர்பான எல்லா கருமங்களையும் ஒழுங்குபடுத்துவதற்கும் தீர்மானிப்பதற்கும் ;

(இ) நிறுவகத்திற்கு அதன் பொது நிருவாகத்திற்கெனவும் முகாமைத்துவத்திற்கெனவும் அத்துடன் வேறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்கெனவும் கிடைக்கச் செய்யப்பட்ட நிதியை நிருவகிப்பதற்கும் கட்டுப்படுத்து வதற்கும் ;

(ஈ) நிறுவகத்திற்குச் செய்யப்பட்ட அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆதனத்தின் மரணசாதனக் கையளிப்புகள், நன்கொடைகள் வேறு மானியக்கொடைகள் என்பவற்றை ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் பெறுவதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும் ;

(உ) நிறுவகத்தின் ஆண்டறிக்கையையும் கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டுக்கணக்குகளையும் ஐந்தொகையையும் மதிப்பீடு செய்வதற்கும் அத்தகைய அறிக்கையையும் அத்தகைய கணக்குகளையும் பல்கலைக்கழகத்திற்கும் ஆணைக்குழுவுக்கும் சமர்ப்பிப்பதற்கும் ;

(ஊ) எதிர்வரும் நிதியாண்டிற்கு நிறுவகத்தின் மதிப்பீடுகளைத் தயாரிக்கச் செய்வித்தலும் அவை அங்கீகரிக்கப்பட்டதன் மீது அத்தகைய மதிப்பீடுகளை பல்கலைக்கழகத்திற்கும் ஆணைக் குழுவுக்கும் சமர்ப்பிப்பதற்கும் ;

(எ) கற்கைச் சபையுடனான அல்லது சபைகளுடனான கலந்தாலோசனையுடன் ;

(i) கற்கைப் பாடநெறிகளின் அளிக்கப்படவேண்டிய பட்டங்களையும், திப்ளோமாக்களையும் வேறு கல்விசார் சிறப்புப் பட்டங்களையும் சான்றிதழ்களையும் ,

(ii) பின்பற்றப்படவேண்டிய பாடநெறிகளையும் சித்தியடையவேண்டிய பரீட்சைகளையும் அத்தகைய சான்றிதழ்களுக்கும் வேறு கல்விசார் சிறப்புப் பட்டங்களுக்கும் தகைமைபெற விரும்பும் மாணவர்களால் திருப்திப்படுத்தப்படவேண்டிய வேறு நிபந்தனைகளையும்,

கல்விசார் குழுவுடனான கலந்தாலோசனையுடன் பல்கலைக்கழகத்திற்கு விதப்புரை செய்வதற்கும்

(ஏ) எக்கருமம் தொடர்பில் துணை விதிகள் அல்லது விதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டதோ அக்கருமம் எதற்கும் துணை விதிகளை அல்லது விதிகளை ஆக்குவதற்கும் அத்தகைய துணைவிதிகளை அல்லது விதிகளை அங்கீகாரத்திற்கென விடயத்திற்கேற்ப பேரவைக்கு அல்லது மூதவைக்குச் சமர்ப்பிப்பதற்கும் ;

ஆயின், எவ்வாறாயினும், பாடநெறிகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பிலான துணை விதி அல்லது விதி எதுவும் கற்கைச் சபையிடமிருந்து அல்லது சபையிடமிருந்து பெற்ற அறிக்கைகளை பரிசீலனை செய்த பின்னர் தவிர, ஆக்கப்படுதலாகாது;

(ஐ) நிறுவகத்தின் பணியைக் கொண்டு நடாத்துவதற்குத் தேவைப்படும் கட்டிடங்களையும், வளவுகளையும் தளபாடங்களையும், உபகரணங்களையும் வேறு பொருட்களையும் ஏற்பாடு செய்வதற்கு ;

(ஒ) ஆணைக்குழுவுக்குப் பல்கலைக்கழகத்துடனான கலந்தாலோசனையுடன் –

(i) நிறுவகத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படக்கூடியவாறான கற்பித்தல் மற்றும் நிருவாகப் பதவிகளை உள்ளடக்கிய அத்தகைய பதவிகளை உருவாக்குதலையும் அத்தகைய பதவிகளை ஒழிப்பதனையும் அல்லது இடைநிறுத்துவதனையும் ; அத்துடன்

(ii) நிறுவகத்திற்கு நியமிக்கப்படவேண்டிய ஆசிரியர்களிடமும் அலுவலர்களிடமும் வேறு ஊழியர்களிடமும் தேவைப்படுத்தப்பட்ட தகைமைகளையும் ;

(iii) நிறுவகத்தின் ஆசிரியர்களாகவும் பரீட்சகர்களாகவும் நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடைய ஆட்களையும் விதப்புரைப்பதற்கும் ;

(ஓ) நிறுவகத்தின் ஊழியர்களை இடைநிறுத்துவதற்கு, பதவிநீக்குவதற்கு அல்லது அவர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் ;

(ஔ) பொருத்தமானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினதான நிலையியற் குழுக்களை அல்லது வேளைக்கேற்ற குழுக்களை நியமிப்பதற்கும் அவற்றின் பணித்துறை நியதிகளைக் குறித்துரைப்பதற்கும், அவற்றின் அறிக்கைகளைப் பரிசீலனை செய்வதற்கும், திரிபுபடுத்துதல்களுடனோ அல்லது திரிபுபடுத்துதல்கள் இன்றியோ அத்தகைய அறிக்கைகளை அங்கீகரிப்பதற்கும் அல்லது அத்தகைய அறிக்கைகளை நிராகரிப்பதற்கும் ;

(க) குறித்துரைக்கப்பட்டு பணிகளிற்குப் பொருத்தமானவர்களான ஆட்களின் அல்லது நிறுவகத்துடன் இணைவதற்குப் பொருத்தமான ஏதேனும் பல்கலைக்கழகப் பீடத்தில் சேவையாற்றும் ஆட்களின் சேவைகளைக் கோருவதற்கும் ;

(ங) கற்கைப் பாடநெறிகளுக்குத் தெரிவு செய்யப்படுவதற்கான அல்லது அனுமதிப்பதற்கான மூலப் பிரமாணத்தை கற்கைச் சபையுடனான அல்லது சபைகளுடனான கலந்தாலோசனையுடனும் பல்கலைக்கழகத்துடனான ஒருப்பாட்டுடனும் ஆணைக்குழுவுக்கு விதந்துரைப்பதற்கும் ;

(ச) பிரயோகிக்கப்படாத ஏதேனும் வருமானம் உட்பட, நிறுவகத்துக்குரிய பணங்களை நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி எந்தப் பிணயத்தில் நம்பிக்கைப் பொறுப்புப் பணத்தை முதலீடு செய்வது சட்டமுறையானதோ அந்த ஏதேனும் பிணையத்தில் முதலீடு செய்வதற்கும் ; அல்லது ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் எவையேனும் அத்தகைய பணத்தை இலங்கையில் அசைவற்ற ஆதனத்தின் கொள்வனவில் முதலீடு செய்வதற்கும் அல்லது அத்தகைய முதலீடுகளை வேறுபடுத்துவதற்கும் அல்லது உடனடியான செலவினத்திற்குத் தேவைப்படாத அத்தகைய பணத்தின் ஏதேனும் பாகத்தை, ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் நிலையான வைப்பீட்டில் வைப்பதற்கும் ; அத்துடன்

(ஞ) இக்கட்டளைச் சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் தோதான சாதனத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு நிறுவகத்தின் தத்துவங்களுக்கு இடைநேர் விளைவான அல்லது அதன் விளைவாந் தன்மையதான நிறுவகத்தின் வேறு எல்லாத் தத்துவங்களையும் பிரயோகிப்பதற்கும் ;

(2) ஏதேனும் கல்விசார் கருமம் தொடர்பிலான தீர்மானம் எதுவும்கற்கைச் சபைக்கு அல்லது அதன்மீது அதன் அபிப்பிராயத்தைப் பதிவு செய்து சபைக்கு அனுப்புவதற்கான வாய்ப்பொன்று முதலில் வழங்கப்பட்டாலன்றி சபையால் நிறைவேற்றப்படுதலாகாது :

ஆயின், அவ்வாறு நிறைவேற்றப்பட்ட ஏதேனும் தீர்மானம் பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடனன்றி செயற்படுத்தப் படுதலாகாது.

இப்பந்தியின் "கல்விசார் கருமம்" என்பது கற்கை அல்லது கட்டுப்பாட்டிற்கும் பொதுப் பணிப்பிற்கும் அமைந்த ஏதேனும் கருமம் என்று பொருள்படும்.

12. (1) கற்கைச் சபையொன்று அல்லது சபைகள் பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பணிப்பாளர் ; (இவர் தவிசாளராதல் வேண்டும்) ;

(ஆ) நூலகத்தையும் வேறு ஊடக வளங்களையும் அல்லது தகவல் தொழிநுட்பவியல் தொடர்பான வளங்களையும் உள்ளடக்கவேண்டியதான நிறுவகத்தின் கற்கை வளங்களுக்குப் பொறுப்பாயிருக்கும் ஆள் ;

(இ) நிறுவகத்தின் கல்விசார் பணியாட்டொகுதியினரால் தீர்மானிக்கப்பட்டவாறு குறிப்பிட்ட சபைக்கு அல்லது சபைகளுக்கு இயைபானவாறு நிரந்தர ஆசிரியர்கள் ;

(ஈ) நிறுவகத்தின் மாணவர்களால் தெரிவுசெய்யப்படும் இரண்டு மாணவர்கள் ;

(உ) நிறுவகத்தின் பணியாட்டொகுதியினரல்லாத இரண்டு உறுப்பினர்கள், இவர்கள் நிறுவகத்திற்கு இயைபான கற்கைத் துறைகளில் சிறந்து விளங்கும் ஆட்களிடையேயிருந்து சபையால் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும் ;

(ஊ) சபையின் நோக்கெல்லைக்குட்பட்ட பாடங்களைக் கற்பிப்பவர்களும் ஆங்கிலப் போதனை மீதான ஆணைக்குழுவின் நிலையியற் குழுவால் தெரிவு செய்யப்பட்டவர்களுமான இரண்டு ஆட்கள் ; அத்துடன்

(எ) மேற்படி பிரிவுகள் எவற்றிற்கும் உட்படாதவர்களும் ஆங்கிலப் போதனை மீதான ஆணைக்குழுவின் நிலையியற் குழுவால் தெரிவு செய்யப்பட்டவர்களுமான இரண்டு ஆசிரியர்கள்.

(2) கற்கைச் சபை அல்லது சபைகள் சபையின் ஒருப்பாட்டுடன், குறித்துரைக்கப்பட்ட ஒரு நோக்கத்திற்காகவும் குறித்துரைக்கப் பட்டவொரு காலப்பகுதிக்கும் ஒரு ஆளை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களை சேர்த்துக்கொள்ளலாம் ; ஆனால் அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்பட்ட ஆளெவரும் தேர்தலுக்கு நிற்பதற்கோ அல்லது கற்கைச் சபையின் அல்லது சபைகளின் ஏதேனும் கூட்டத்தில் வாக்களிப்பதற்கோ உரித்துடையவராதலாகாது.

(3) கற்கைச் சபையின் அல்லது சபைகளின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண், சேர்த்துக்கொள்ளப்பட்ட உறுப்பினர்கள் எவருமிருப்பின் அவர்கள் புறநீங்கலாக அதன் மொத்த உறுப்பாண்மையின் மூன்றிலிரண்டிற்குக் குறையாத ஆகக் குறைந்த எண்ணிக்கையாதல் வேண்டும்.

(4) கற்கைச்சபை அல்லது சபைகள் அவசியமானபோது கூடுதல் வேண்டும் ; எவ்வாறாயினும் ஒவ்வோராண்டும் ஆறு தடவைகளுக்குக் குறையாமல் கூடுதல் வேண்டும்.

(5) ஒராம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்-

(அ) கற்கைச் சபையின் அல்லது சபைகளின் எந்தக் கூட்டத்தில் பரீட்சைகள் தொடர்பிலான அல்லது பரீட்சைகளுடன் தொடர்புடைய கருமங்கள் கலந்துரையாடப்படுகின்றனவோ அந்த ஏதேனும் கூட்டத்திலிருந்து புறநீக்கம் செய்யப்படுதல் வேண்டும் அத்தகைய புறநீக்கம் எவ்வாறிருப்பினும் கூட்டம் முறையாக நடைபெற்றதாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஆ) அவர்கள் நிறுவகத்தில் பாடநெறிகளுக்காக பதிவு செய்யப்பட்டிருக்கும்போது அவர்களது மாணவத்துவக் காலப்பகுதியின்போது பதவிதாங்குதல் வேண்டும்.

(6) பந்தி (1) இன் (உ) என்னும் உட்பந்தியின்கீழ் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர் ஒவ்வொருவரும் அவரது தெரிவின் தேதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவி தாங்குதல் வேண்டும் என்பதுடன் பதவியிலிருந்து விலக்கப்பட்டாலன்றி மீளத் தெரிவு செய்யப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும் ;

ஆயினும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் எவரும் அவரது பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னர் பதவியை வறிதாக்குவாராயின் அவரது பின்னுறுபவர் அவர் எந்த உறுப்பினரைப் பின்னுறுகின்றாரோ அந்த உறுப்பினரது பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிதாங்குதல் வேண்டும் ;

ஆயின் மேலும், பதவி தாங்குவதற்கென தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் எந்த அதஸ்தின் பயனைக் கொண்டு அத்தகைய உறுப்பினர் கற்கைச் சபையின் உறுப்பினராக வந்தாரோ அந்த அந்தஸ்தை வகிக்கின்றவரை மாத்திரமே அவ்வாறு தொடர்ந்திருக்கலாம்.

(7) கற்கைச் சபைக்கு அல்லது சபைகளுக்குத் தெரிவு செய்யப்படும் உறுப்பினர் எவரும் பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான வேண்டுகோளொன்றின் மூலம் அவரது பதவியைத் துறக்கலாம் ;

(8) கற்கைச் சபையின் அல்லது சபைகளின் கூட்டமொன்றிற்கான கூட்ட நடப்பெண் அதன் மொத்த உறுப்பாண்மையின் மூன்றிலொன்றாதல் வேண்டும்.

*13.* (1) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கற்கைச் சபை அல்லது சபைகள் நிறுவகத்தின் போதனை, பயிற்சி, ஆராய்ச்சி அத்துடன் பரீட்சைகள் என்பன மீது கட்டுப்பாட்டையும் பொதுவான பணிப்பையும் கொண்டிருத்தல் வேண்டும் .

(2) கல்விசார் குழுவானது, (1) ஆம் உட்பந்தியால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி-

(அ) சபையால் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் விடயத்தைப் பரிசீலனை செய்தலும் அறிக்கையிடுதலும் ;

(ஆ) பாடநெறிகள், கற்பித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அல்லது பரீட்சைகள் தொடர்பானவை அல்லாத விடயங்கள் மீது சபைக்கு விதப்புரைகளும் அறிக்கைகளும் சமர்ப்பித்தலும் ;

(இ) ஏதேனும் விசேட பாடம் அல்லது பாடங்கள் பற்றி பரிசீலனை செய்து அறிக்கையிடும் நோக்கத்திற்காக கல்விசார் குழுவின் உறுப்பினர்கள் அல்லாத ஆட்களை உள்ளடக்கக்கூடிய குழுக்களை நியமித்தலும் வேண்டும்;

(ஈ) சபைக்கு –

(i) பாடநெறிகளுக்கும் பரீட்சைக்கும் மாணவர்களை அனுமதிப்பதற்கான தேவைப்பாடுகளையும் ;

(ii) ஆசிரியர்களாகவும் பரீட்சகர்களாகவும் அங்கீகரிக்கப்படுவதற்குப் பொருத்தமான ஆட்களையும் ;

(iii) விதித்துரைக்கப்பட்ட பரீட்சைகளில் சித்தியடைந்து அத்துடன் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளைத் திருப்திப்படுத்தியுள்ளவர்களும் பட்டங்களின், திப்ளோமாக்களின், சான்றிதழ்களின் அத்துடன் வேறு கல்விசார் சாதனங்களின் அளிப்புக்குத் தகுதியுடையவர்களுமான ஆட்களையும் ;

(iv) ஆராய்ச்சிப்படிப்புப் பரிசில்களுக்கும் புலமைப் பரிசில்களுக்கும் புலமைப் பொருளுதவிகளுக்கும் ஏழைக்கல்வியுதவிகளுக்கும் பதக்கங்களுக்கும் வேறு பரிசுகளுக்கும் போட்டி முறைகளையும் நிபந்தனை களையும் ;

(v) ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்களினதும் புலமைப்பரிசில்களினதும் புலமைப் பொருளுதவிகளதும் ஏழைக்கல்வியுதவிகளதும் பதக்கங்களினதும் வேறு பரிசுகளினது அளிப்புக்குப் பொருத்தமான ஆட்களின் பெயர்களையும் ,

விதப்புரை செய்தலும் வேண்டும் ; அத்துடன்

(உ) இக்கட்டளைச் சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் தோதான சாதனத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு பாடசாலையின் தத்துவங்களுக்கு இடைநேர்விளைவான அல்லது விளைவாந்தன்மையதான கல்விசார் விடயங்கள் தொடர்பில் பாடசாலையின் வேறு எல்லாத் தத்துவங்களையும் பிரயோகித்தலும் வேண்டும்.

*14.* நிறுவகத்தின் நிதி ஆண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

15. (1) நிறுவகம் பட்டப்பின் ஆங்கில நிறுவக நிதியம் என அழைக்கப்படும் நிதியமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக்குறிப்பீடு செய்யப்படும்) இதற்குள் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) ஏதேனும் தோதான சாதனத்திற்கிணங்க நிறுவகத்திற்குச் செலுத்தப்படவேண்டிய எல்லாக் கட்டணங்களும் ;

(ஆ) பாராளுமன்றத்தால் வாக்களிக்கப்பட்டவையும் நிறுவகத்திற்கு மானியக் கொடையாக ஆணைக்குழுவால் செலவீடு செய்யப்பட்டவையுமான எல்லாப் பணங்களும் ;

(இ) அறக்கொடைகளிலிருந்து பெறப்பட்ட எல்லா வருமானமும் ; அத்துடன்

(ஈ) எத்தன்மையதுமான மூலத்திலிருந்து நிறுவகத்திற்குத் திரளும் அத்தகைய வேறு பணங்கள்.

(2) குறிப்பிட்டதொரு மாதத்திற்குள் நிதியத்தினுள் செலுத்தப்பட்ட எல்லாப் பணங்களினதும் பொழிப்பொன்று, தோதான வருமானத் தலைப்பின்கீழ் வகுக்கப்பட்டு அடுத்துறும் மாதத்தின் இறுதிக்கு முன்னர் பணிப்பாளரால் ஆணைக்குழுவுக்கு அதன் தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

16. பின்வருவன பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும் :-

(அ) நிறுவகத்தின் கணக்குகளை சபையால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான படிவத்திலும் முறையிலும் வைத்திருத்தல்;

(ஆ) நிதியத்தினுள் செலுத்தப்பட்ட எல்லாப் பணங்களையும் பெறுதலும் அத்தகைய பணங்களைத் தகுந்த கணக்குத் தலைப்பில் வரவு வைத்தலும் ;

(இ) அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளையும் செய்தல் ; அத்துடன்

(ஈ) ஆணைக்குழுவுக்குத் தேவையானவாறு அடுத்துவரும் ஆண்டின் மதிப்பீடுகளையும் ஆண்டு நிதி ஒதுக்கீடுகளையும் சபைக்காகத் தயாரித்தல் ;

ஆயின், எவ்வாறாயினும், குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக மானியக்கொடைகளிலிருந்து பெறப்பட்ட அல்லது குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களுக்கான அறக்கொடைகளிலிருந்து செய்யப்பட்ட வருமானம் நிறுவகத்தின் கணக்குகளிலிருந்து புறம்பாக கணக்கீடு செய்யப்படவேண்டும் என்பதுடன் நிறுவகத்தின் பொதுநோக்கங்களுக்காக அல்லது அத்தகைய மானியக்கொடைகள் அல்லது அறக்கொடைகள் எந்த நோக்கத்துக்காக ஆக்கப்பட்டனவோ முறையே அந்த எவையேனும் நோக்கங்கள் அல்லது குறிக்கோள்கள் அல்லாத வேறு எவையேனும் நோக்கங்களுக்காக அல்லது குறிக்கோள்களுக்காக கொடுப்பனவு எதுவும் செய்யப்படுதலாகாது.

17. (1) நிறுவகமானது, ஆண்டுக் கணக்குக் கூற்றொன்றையும் அதன் செயற்பாடுகள் தொடர்பில் ஆணைக்குழு காலத்துக்குக்காலம் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் அத்தகைய விபரங்கள் அடங்கிய புள்ளிவிபரங்களையும் தயாரித்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் கணக்குப் புத்தகங்கள் நிறுவகத்தின் அலுவலகத்தில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

18. உயர்கல்வி நிறுவகமொன்றின் கணக்குகளின் கணக்காய்வுக்கு இயைபான சட்டத்தின் பாகம் XIII இன் அத்தகைய ஏற்பாடுகள் நிறுவகக் கணக்காய்வுக்கும் அது தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

19. (1) நிறுவகத்தின் பணியாட்டொகுதியானது, நிறுவகத்தின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றைத் திறமையாகப் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடனும் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடனும் அவசியமென அது கருதக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் ஆசிரியர்களையும் மற்றும் வேறு ஊழியர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் பணியாட்டொகுதி, பல்கலைக்கழகத்தால் அதன் சொந்த பணியாட்டொகுதியிடையேயிருந்து விடுவிப்பின்மீது ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும் அல்லது விடயத்திற்கேற்ப ஆணைக்குழுவினால் அல்லது பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்படுதல் வேண்டும். சட்டத்தின் பாகம் X இன் ஏற்பாடுகள் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கான நியமனங்களுக்கும் அவை தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பல்கலைக்கழகத்தின் அலுவலர், ஆசிரியர் அல்லது வேறு ஊழியர் ஒருவர் நிறுவகத்தின் சேவைக்கு முழுநேர அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளவிடத்து, நிறுவகம் அவருக்கு பல்கலைக்கழகத்தில் அவரது நிலையான பதவியின் சம்பளத்தையும் படிகளையும் செலுத்துதல் வேண்டும். வேறு ஏதேனும் விடயத்தில் நிறுவகம் சம்பந்தப்பட்ட அலுவலருக்கு, ஆசிரியருக்கு அல்லது வேறு ஊழியர்களுக்கு அது பல்கலைக்கழகத்துடனான கலந்தாலோசனையுடனும் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறும் தீர்மானிக்கக்கூடியவாறும் அத்தகைய படியைச் செலுத்தலாம்.

(4) நிறுவகத்தின் பணியாட்டொகுதி பணிப்பாளரின் பணிப்பிற்கும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டிற்கும் அமைந்தோராதல் வேண்டும்.

20. நிறுவகத்தின் வேறு குழுமத்தின் செயல், தீர்மானம் அல்லது நடவடிக்கை எதுவும் அதன் உறுப்பினர்களிடைய வெற்றிடமொன்று அல்லது வெற்றிடங்கள் இருப்பதன் காரணமாக அல்லது அத்தகைய உறுப்பினர்களின் நியமனத்தில் ஏதேனும் குறைப்பாடு அல்லது எவையேனும் குறைப்பாடுகள் இருப்பதன் காரணமாக மாத்திரம் செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது.

21. இக்கட்டளைச் சட்டத்தில்-

"சட்டம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் எனப் பொருள்படும்.

"தோதான சாதனம்" என்பது, சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும் ;

"ஆசிரியர்" என்பது சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும் ;

"பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு" என்பது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எனப்பொருள்படும்.

12-629

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.